செ.வெ.எண்: 19 நாள்: 08.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016ல் பொதுமக்கள் வாக்களிக்க 2525 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்படவுள்ளது - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2016 முன்னிட்டு வாக்குச்சாவடிகளில் வரைவு பட்டியல்களின் மீதான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான கலந்தாய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 07.09.2016 அன்று நடைபெற்றது.

இந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான கலந்தாய்வுக்கூட்டத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழ்நாட்டில் தற்போதுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் 24.10.2016 உடன் நிறைவடைவதுள்ளதால் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உள்ளாட்சி சாதாரண அக்டோபர் 2016ல் நடத்தும் வகையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஆரம்பக்கட்ட பணிகளை துவக்கியுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல்களுக்கான வாக்குச்சாவடிகளில் வரைவு பட்டியல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள கால அட்டவணையின்படி வெளியிடப்பட்டுள்ளது.

இதில் வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையில் ஊரகப்பகுதிகளில் 2252 வாக்குச்சாவடிகளும், நகர்ப்புற பகுதிகளில் 273 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற பகுதிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், ஊரகப்பகுதிகளுக்கு வாக்குச்சீட்டு முறைகளும் பயன்படுத்தப்படவுள்ளது. நகர்ப்பகுதிகளில் 1200 வாக்காளர்களுக்கு 1 வாக்குச்சாவடியும், ஊரகப்பகுதிகளில் 1000 வாக்காளர்களுக்கு 1 வாக்குச்சாவடியும் அமைக்கப்பட்டுள்ளதுடன் நகர்ப்பகுதிகளில் 1 வார்டுக்கு குறைந்தபட்சம் 1 வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வாக்காளர்கள் எண்ணிக்கை 1200க்கும் மேல் இருக்கும்பட்சத்தில் தேவைக்கேற்ப கூடுதல் வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நமது மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் 638 ஒரு வார்டு வாக்குச்சாவடிகளும், 1614 இரு வார்டு வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஆண் வாக்குச்சாவடிகள் 36ம், பெண் வாக்குச்சாவடிகள் 36ம், அனைத்து வாக்காளர்கள் 2180ம் என மொத்தம் 2252 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிகளில் ஆண் வாக்குச்சாவடிகள் 53ம், பெண் வாக்குச்சாவடிகள் 53ம், அனைத்து வாக்காளர்கள் 167ம் என மொத்தம் 273 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாக்காளர்கள் எளிதில் வாக்களிக்கும் வகையில் தாங்கள் வசிக்கும் பகுதியிலிருந்து அதிகபட்சம் 2 கி.மீ சுற்றளவிற்குள் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் வாக்காளர் பட்டியல்களில் ஏதேனும் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் தொடர்பாக உரிய படிவங்களில் பூர்த்தி செய்து சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்களிடம் (வருவாய் கோட்ட அலுவலர்கள்) விண்ணப்பம் செய்ய வேண்டும். இதன் மூலம் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் அடிப்படையிலேயே உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் உரிய திருத்தம் செய்யப்படும். மேலும் தேர்தல் தொடர்பான அரசியல் கட்சியினரின் அனைத்து கருத்துகளும் பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே நமது மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்திட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசியுள்ளார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன், திருமயம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ரகுபதி, திரு.கருப்பையன் (அ.தி.மு.க), திரு.நைனாமுகம்மது (தி.மு.க), திரு.அன்புமணவாளன் (சி.பி.எம்.), திரு.ராமச்சந்திரன் (சி.பி.ஐ), திரு.உலகநாதன் (சி.பி.ஐ) உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சியினர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**